**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**தேதி 08.05.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து மத்திய அரசு இன்று புதுடெல்லியில் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ராணுவ நடவடிக்கை குறித்து விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

பகல்காம் தீவிரவாத தாக்குதல் காரணமாகவே, தீவிரவாத கட்டமைப்புகளை தாக்க வேண்டிய கட்டாயம், இந்தியாவிற்கு ஏற்பட்டதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2ஆம் உலகப் போர் முடிவிற்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு நாள், புதுச்சேரியில் இன்று அனுசரிக்கப்பட்டது.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலமான ப்ளஸ் டூ தேர்வில், 98.53 சதவிகித மாணவ-மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

------------------------------

மோடி மறு ஆய்வு 1 (12)

தேசியப் பாதுகாப்பு நிலவரங்களில், அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் பின்னணியில், நாட்டின் தயார் நிலை மற்றும், அமைச்சகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில், பல்வேறு மத்திய அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கான அரசுச் செயலர்களுடன், உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். நிலவரங்களை எதிர்கொள்வதற்கான பல்வேறு அமைச்சகங்களின் திட்டங்கள் மற்றும் முன் தயாரிப்புகள்

உட்பட, பல்வேறு பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தின் போது விவாதிக்கப்பட்டது. சிவில் பாதுகாப்புக் கட்டமைப்பின் வலுவாக்கம், பொய்த் தகவல் மற்றும் போலிச் செய்திகளை எதிர்ப்பதற்கான முயற்சிகள், முக்கிய கட்டமைப்புகளின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் ஆகியன இதில் அடங்கும். உயர்நிலைக் கூட்டம் குறித்து கூடுதல் தகவல்கள்….

**(வாய்ஸ்)**

மோடி மறு ஆய்வு 2 (12)

**(வாய்ஸ்)**

அரசு நிர்வாகத்தில், செயல்பாட்டு தொடர்ச்சி மற்றும் அமைப்பு ரீதியிலான நெகிழ்வுத் தன்மையைப் பராமரிக்க, அமைச்சகங்கள் மற்றும் அரசு ஏஜென்சிகளுக்கு இடையே, தடையற்ற ஒருங்கிணைப்பு அவசியம் என, மறு ஆய்வுக் கூட்டத்தில் பிரதமர் வலியுறுத்தினார். மாநில அரசுகள் மற்றும் கள அளவிலான அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு, மத்திய அமைச்சகங்களுக்கு அவர் அறிவுறுத்தினார். அனைத்து அமைச்சகங்களிலும் உஷார் நிலையை தொடர்ந்து பராமரிக்கவும், அகநிலை தகவல் தொடர்புகள் மற்றும் அவசர கால தயார் நிலை குறித்து சிறப்பு கவனம் செலுத்தவும், அவர் உத்தரவிட்டார். முக்கியமான இத்தருணத்தில், தேசிய பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு, மற்றும், செயல்பாட்டுத் தயார் நிலையை பராமரிப்பதற்கான அரசின் உறுதிப்பாட்டை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்.

மோடி மறு ஆய்வு 3 (5)

பிரதமர் நடத்திய உயர்நிலை மறு ஆய்வுக் கூட்டத்தில், பாதுகாப்பு, வெளியுறவு, தொலைத் தொடர்பு, தகவல்-ஒலிபரப்பு, மின்சாரம், சுகாதாரம், மற்றும், உள்துறை உள்ளிட்ட முக்கிய துறைகளின் செயலர்களும், மத்திய அமைச்சரவைச் செயலர், மற்றும், பிரதமர் அலுவலகத்தின் மூத்த அதிகாரிகளும், கலந்து கொண்டனர்.

-------------------------------

*பொய்ப் பிரச்சாரம் 1 (6)*

பாகிஸ்தானிலும், பாகிஸ்தானிய ஆக்ரமிப்பு காஷ்மீரிலும் உள்ள தீவிரவாத கட்டமைப்புகள் மீது, இந்தியா நடத்திய தாக்குதலால், பாகிஸ்தான் நிலை குலைந்து, பொய்த் தகவல் மற்றும் போலிச் செய்திகளை பரப்பி வருகிறது. வீரமாக பதிலடி கொடுத்தது போலவும், அபார வெற்றிகளை ஈட்டியது போலவும், ஜோடிக்கப்பட்ட கதைகளை, அந்நாடு வெளியிட்டு வருகிறது. இதுகுறித்து ஒரு செய்தி தொகுப்பு….

**(வாய்ஸ்)**

*பொய்ப் பிரச்சாரம்* 2 (15)

**(வாய்ஸ்)**

தீவிரவாதிகளை பாதுகாப்பதற்கான சதித் திட்டங்களில் இருந்து உலகின் கவனத்தை திசை திருப்பி, பொய்கள் மற்றும் டிஜிட்டல் ஜாலங்கள் மூலம் உண்மைகளை மறைத்து, நிலவரங்களை தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர, பாகிஸ்தான் கடுமையாக முயன்று வருகிறது. பாகிஸ்தானில் செல்வாக்கு பெற்றுள்ள அரசியல் தலைவர்கள் உட்பட, பாகிஸ்தானுக்கு ஆதரவான பல்வேறு சமூக ஊடகக் கணக்குகளில், தவறான தகவல்கள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, இந்திய வீரர்கள் சிறை பிடிக்கப் பட்டதாக, ஆதரமற்ற, நகைப்பிற்குரிய கருத்து ஒன்றை, பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா ஆசிஃப் வெளியிட்டு, பின்னர் அதை விலக்கிக் கொண்டார். இத்தகைய முயற்சிகளால், எந்த பலனும் கிடைக்காது என்பதை, தீவிரவாதிகளுக்கு ஆதரவான பாகிஸ்தானிய சக்திகள், நன்றாகவே உணர்ந்துள்ள நிலையிலும், சமூக ஊடகத்தில், ஜோடிக்கப்பட்ட படங்கள், மற்றும் சம்பந்தமில்லாத வீடியோக்களையும், பொய்யான தகவல்களையும் வெளியிட்டு வருகின்றன.

------------------------------

*ஜெய்சங்கர்* (19)

பகல்காம் தீவிரவாத தாக்குதல் காரணமாகவே, எல்லைக்கு அப்பால் உள்ள தீவிரவாத கட்டமைப்புகளை தாக்க வேண்டிய கட்டாயம்

இந்தியாவிற்கு ஏற்பட்டதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். மிகுந்த கட்டுப்பாட்டுடன், அளந்து எடுக்கப்பட்ட இந்நடவடிக்கை, நிலவரங்களை தீவிரமாக்கும் நோக்கம் கொண்டது அல்ல என்றும் அவர் கூறியுள்ளார். ஆயினும், ராணுவ ரீதியில் இந்தியா தாக்கப் பட்டால், மிக உறுதியான முறையில், பதிலடி கொடுக்கப்படும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார். ஈரானிய வெளியுறவு அமைச்சர் டாக்டர் சையது அப்பாஸ் அராக்சி-யுடன் இணைந்து இன்று புதுடெல்லியில், இருநாடுகளுக்கும் இடையிலான, 20ஆவது கூட்டுக் கமிஷன் கூட்டத்திற்கு தலைமை ஏற்று பேசுகையில், திரு. ஜெய்சங்கர் இவ்வாறு கூறினார். ஈரானிய வெளியுறவு அமைச்சர் திரு. அராக்சி, கடந்த ஆகஸ்ட் மாதம் பதவியேற்ற பின்னர் தற்போது முதல்முறையாக இந்தியா வந்து இருப்பதும், இந்தியா-ஈரான் நட்புறவு ஒப்பந்தத்தின் 75ஆம் ஆண்டை ஒட்டி, கூட்டுக் கமிஷன் கூட்டம் நடத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் இருதரப்பினரும்,இருதரப்பு உறவுகளை மேலும் முன்னெடுத்து செல்வது குறித்து விவாதங்களை மேற்கொண்டு, பரஸ்பர அக்கறை உள்ள இதர பிரச்சனைகளையும் மறு ஆய்வு செய்தனர்.

-----------------------------

*அனைத்து கட்சி* (15)

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து மத்திய அரசு இன்று புதுடெல்லியில் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ராணுவ நடவடிக்கை குறித்து விவரிக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியின் திரு. மல்லிகார்ஜுன கார்கே, திரு. ராகுல் காந்தி, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, சமாஜ்வாதி கட்சியின் திரு. ராம்கோபால் யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் திரு. சுதீப் பந்தோபாத்யாய், திமுகவைச் சேர்ந்த திரு. டி.ஆர். பாலு உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். பின்னர் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் பேசுகையில், இன்றைய கூட்டம் ஆக்கப்பூர்வ முறையில் அமைந்ததாகவும், அரசியல் கட்சித் தலைவர்கள், மிகுந்த பொறுப்பு மற்றும் பக்குவத்துடன் தங்களின்

கருத்துக்களை வெளிப் படுத்தியதாகவும் தெரிவித்தார். இதுபோன்ற முக்கிய தருணங்களில், அரசியலுக்கு இடமில்லை என்றும், அரசியல் கட்சித் தலைவர்கள் கூறியதாக அவர் தெரிவித்தார்.

-------------------------------

*வியோமிகா சிங்* (13)

நேற்று இரவு, வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில், அவந்திபுரா, ஸ்ரீநகர், ஜம்மு, பதான்கோட், அம்ரித்சர், உள்ளிட்ட பல்வேறு ராணுவ இலக்குகளை, ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் தாக்க, பாகிஸ்தான் மேற்கொண்ட முயற்சிகளை, **ஒருங்கிணைந்த, ஆளில்லா வானூர்தி எதிர்ப்பு வசதிகள்** மூலம், இந்தியா வெற்றிகரமாக முறியடித்துள்ளது. இந்திய விமானப் படையைச் சேர்ந்த விங் கமாண்டர் வியோமிகா சிங் இன்று மாலை புதுடெல்லியில், செய்தியாளர் கூட்டம் ஒன்றில் இதை தெரிவித்தார். லாகூரில், பாகிஸ்தானின் **வான்வழிப் பாதுகாப்பு ரேடார்** தாக்கி அழிக்கப்பட்டதாக தகவல் கிடைத்து இருப்பதாகவும், அவர் கூறினார். நிலவரங்களை தீவிரமாக்க வேண்டாம் என்ற இந்தியாவின் நிலைப்பாடு தொடர்கின்ற போதிலும், இதை பாகிஸ்தான் மதிக்க வேண்டியது அவசியம் என்று, இந்தியப் படைகள் மீண்டும் வலியுறுத்தி இருப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

------------------------------

*பாதுகாப்பு-பாகிஸ்தான் (11)*

ஜம்மு-காஷ்மீரின் குப்வாரா, பாராமுல்லா, ரஜோரி, மற்றும் பூஞ்ச் மாவட்டத்தில், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை ஒட்டி உள்ள பகுதிகள் மீதான, பீரங்கி மற்றும் வெடிகுண்டு தாக்குதலை, பாகிஸ்தான் தீவிரபடுத்தி இருப்பதாகவும், இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில், 3 பெண்கள், மற்றும், 5 குழந்தைகள் உட்பட, 13 அப்பாவி உயிர்கள் பலியாயின. பாகிஸ்தானின் பீரங்கி மற்றும் வெடிகுண்டு தாக்குதலை தடுத்து நிறுத்தும் வகையில், பீரங்கி மற்றும் வெடிகுண்டு தாக்குதல் மூலம் பதிலடி கொடுக்கும் கட்டாயத்திற்கு இந்தியா தள்ளப்பட்டது. பாகிஸ்தான் எந்த விதத்தில், எவ்வளவு

தீவிரமாகத் தாக்கியதோ, அதே விதத்தில் அதே அளவு தீவிரத்துடன் இந்தியா மறு தாக்குதல் நடத்தி இருப்பதாகவும் அமைச்சகம் கூறியுள்ளது.

------------------------------

*புதுச்சேரி உலகப் போர் (7)*

2ஆம் உலகப் போர் முடிவிற்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு நாள், புதுச்சேரியில் இன்று அனுசரிக்கப்பட்டது. கடற்கரை சாலையில் உள்ள போர் வீரர் நினைவுச் சின்னத்தில், புதுச்சேரி அரசு சார்பில், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன், சென்னையில் உள்ள பிரெஞ்ச் தூதுர் சார்பில், புதுச்சேரிக்கான துணைத் தூதர் திரு. ழான் பிலிப் ஹூித்தர் ஆகியோர், மலர் வளையம் வைத்து அஞசலி செலுத்தினர். இதுகுறித்து எமது செய்தியாளர் வழங்கும் கூடுதல் தகவல்கள்.....

**(வாய்ஸ்)**

------------------------------

*ப்ளஸ் டூ (10)*

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம், கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது. புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், 101 தனியார் மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த, 7 ஆயிரத்து 564 மாணவ-மாணவிகள் ப்ளஸ் டூ தேர்வு எழுதியதில், 7 ஆயிரத்து 453 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். ஒட்டுமொத்தமாக, 98.53 சதவிகிதம் தேர்ச்சி விகிதம் எட்டப் பட்டுள்ளது. புதுச்சேரி பகுதியில் 51 பள்ளிகளும், காரைக்கால் பகுதியில் 12 பள்ளிகளும், 100 சதவிகித தேர்ச்சி விகிதம் காட்டி உள்ளன. கணிப்பொறி அறிவியல், கணிப்பொறி பயன்பாடு, பிரெஞ்ச் உட்பட பல்வேறு பாடங்களில், மொத்தம் 582 மாணவ-மாணவிகள், நூற்றுக்கு 100 மதிப்பெண் பெற்றுள்ளனர்.

------------------------------

*ஐபிஎல் (4)*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு, தரம்சாலாவில் நடைபெறும் போட்டியில், டெல்லி-பஞ்சாப் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு கொல்கத்தாவில் நடைபெற்ற போட்டியில், சென்னை அணி, 2 விக்கெட் வித்தியாசத்தில், கொல்கத்தா அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

------------------------------

*வானிலை (15)*

தென்மேற்கு பருவமழை, அந்தமான் கடல் மற்றும் தென்கிழக்கு வங்க கடல் பகுதிகளில், வரும் 13-ஆம் தேதி வாக்கில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், தற்போது தென்கிழக்கு வங்கக் கடலில், வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும், வளிமண்டலத்தின் கீழடுக்கில், கிழக்கு மற்றும் மேற்குதிசை காற்று சந்திக்கும் பகுதியும், நிலவுகின்றன. இதன் காரணமாக, இன்றைய தினம் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 14ஆம் தேதி வரை, ஓரிரு இடங்களில், மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெப்பநிலையை பொறுத்த வரை, இன்றும், நாளையும், அதிகபட்ச வெப்பநிலையில் பெரிய மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு தான் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் தமிழகத்தில் ஒருசில இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக சேலம் மாவட்டம் சந்தியூரில், 11 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

------------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை குறித்து மத்திய அரசு இன்று புதுடெல்லியில் நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், ராணுவ நடவடிக்கை குறித்து விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

பகல்காம் தீவிரவாத தாக்குதல் காரணமாகவே, தீவிரவாத கட்டமைப்புகளை தாக்க வேண்டிய கட்டாயம், இந்தியாவிற்கு ஏற்பட்டதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

2ஆம் உலகப் போர் முடிவிற்கு வந்ததன் 80ஆம் ஆண்டு நினைவு நாள், புதுச்சேரியில் இன்று அனுசரிக்கப்பட்டது.

புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம் மூலமான ப்ளஸ் டூ தேர்வில், 98.53 சதவிகித மாணவ-மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.